[8th August 1966

திரு. டி. கார்ச்சா கவுடர் : நீலகிரி ஜில்லாவில் பூமிகளைக் கொடுப்பதில் தடை இருக்கிறது. ராணுவத்தினர் குடும்பத்தினருக்கு 5 ஏக்கர், 10 ஏக்கர் நிலங்களைத் தடையில்லாமல் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்வார்களா ?

கனம் திரு. எம். பக்தவத்சலம் : தடை எந்தக் காரணத்திற்காக இருக்கிறது என்பதைப் பார்த்துத்தான் நீக்க முடியும். ஸ்லோப் அதிகமாக இருந்தால், அதில் யாராக இருந்தாலும் பயிர் செய்வதற்கு விடுவதில்லை.

திரு. வை. சங்கரன் : இதிலே கொடுக்கப்படுகிற சலுகைகள் எல்லாம் ஆக்சுவலாக ராணுவத்தில் இருப்பவர்களுக்குத்தானு அல்லது எக்ஸ்-சர்விஸ்மென் குடும்பத்திற்கும் கொடுக்கப்படுகிறதா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம் : எக்ஸ்-சர்விஸ்மென் குடும்பத்தினருக்கும் ஓரளவு கொடுக்கப்பட்டு வருகிறது.

தங்கப்பத்திரத் திட்டம்

*192 கேள்வி.—திரு. இராம. அரங்கண்ணல் : கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) தங்கச் சேமிப்புத் திட்டத்துக்குப் பூரண ஆதரவும் ஒத்துழைப்பும் தருமாறு எல்லா அறநிலையங்களுக்கும், ஆதீனங்களுக்கும் அறநிலையப் பாதுகாப்புக் குழுவினரால் அறிக்கை அனுப்பப்பட்டதா ?

(இ) அதன் விளைவாகக் கிடைத்த பலன் என்ன ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Communications have been forwarded by the Commissioner, Hindu Religious and Charitable Endowments (Administration) Department.

(b) 1,07,427.624 grams of gold have so far been subscribed by the religious institutions.

Gold refinery project

*193 Q.—SRI V. SANKARAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(a) whether there is any proposal to establish a gold refinery project in Guindy; and

(b) if so, the details thereof?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : (a) Yes, Sir.

(b) With a view to make 14 carat gold available to small manufacturers, individual goldsmiths or artisans and Industrial Co-operative Societies for goldsmiths, an Industrial Co-operative Society has been organised at Madras to run a Gold Refinery. There are 82 members in the Society at present. It is located in a rented building at Guindy. A working capital loan of Rs. 3 lakhs

8th August 1966]

was sanctioned to the Society by the Government besides free services of staff of one Gazetted Officer, one Junior Analytical Chemist and one Manager-Accountant. The equipments required for the refinery have been purchased and installed.

திரு. வை. சங்கரன்: அவர்களிடமிருந்து 14 காரட் தங்கம் கிடைக்குமா? அப்படியானால் எப்படிப்பட்டவர்களுக்கு அந்தத் தங்கம் வழங்கப்படும் என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: பழைய நகைகளை வாங்கி அதை முழுத் தங்கமாக மாற்றிப் பின்னால் 14 காரட் தங்கமாக மாற்றுவது. அதுதான் அந்த கோல்ட் ரிபைனரியில் கவனிக்கப்படுவது.

பொற்கொல்லர்கள்

*194 கேள்வி.—**திரு. எம். எஸ். செல்வராஜன்:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) பொற்கொல்லர்களுக்குத் தொழில் செய்வதற்காகக் கடன் வழங்கப்பட்டுள்ளவர்களில், முதலில் குறிப்பிட்ட தொழிலை மாற்றிக் கொள்வதற்கு எத்தனை பேர் மனுச் செய்திருக்கிறார்கள், மாவட்ட வாரியாக?

(இ) அவைகளின் மீது எடுத்துக்கொண்டுள்ள நடவடிக்கை யாது?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (அ) & (இ) A statement[a] is placed on the Table of the House.

திரு. எம். எஸ். செல்வராஜன்: பொற்கொல்லர்கள் ஒரு தொழிலுக்குக் கடன் பெற்று அதை வேறு வணிகத்திற்கு மாற்றவேண்டிய நிலைமை ஏற்பட்டால், அவர்கள் பெற்ற கடனைத் திரும்பக் கொடுத்து, பின்னால் மனுச் செய்து அதற்குப் பிறகு மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது என்று தகவல் அரசாங்கத்திற்கு வந்திருக்கிறதா? அப்படியானால் அந்தக் கடனைத் திரும்பப் பெறுவது இல்லாமலேயே வேறு ஒரு தொழிலுக்கு மாற்றுவதற்கு வழிவகை செய்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. எம். பக்தவத்சலம்: திரும்பச் செலுத்தாமலேயே வேறு தொழிலுக்கு மாற்றுவதற்கு அனுமதிக்கும் விஷயம் ஆராயப்பட்டு அனுமதிக்கப்படுகிறது.

பட்டாபிராமன் கமிட்டி அறிக்கை

*195 கேள்வி.—**திரு. து. ப. அழகமுத்து:** கனம் முதல் அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) Employees' State Insurance Scheme பற்றிய பட்டாபிராமன் கமிட்டியின் அறிக்கை அரசாங்கத்திற்கு சமர்ப்பிக்கப் பட்டுவிட்டதா?

(இ) ஆமெனின், அதன் நகல் ஒன்று சபை முன் வைக்கப் படுமா?

[a] Printed as Appendix I on pages 867–875.